Registered as a News Paper in Sri Lanka    பக்கங்கள்: 04    விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 01    பிரமோதூத ஷூ ஆனி மீ 6 ஆம் உ    புதன்கிழமை    (20 - 06 - 1990)    ஹிஜ்ரி 1410    ஜுல்ஹஜ் 26    ஓசை 122

## யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்வோர் பிரச்சினை; அரசஅதிபர் கூட்டும் அவசரமாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலையில் பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்துள்ளதாலும் மக்களுடைய அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் சீரான விநியோகத்துக்காகவும் இன்று (20-06-90) புதன்கிழமை காலை 10-00 மணிக்கு நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் பின்வருவோர் தவறாது சமுகம்தர வேண்டுமென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார். அதிகாரிகள் விபரம்; மேலதிக அரசாங்க அதிபர், உதவி உணவு ஆணையாளர், உதவி கூட்டுறவு ஆணையாளர், சமூக சேவை உதவி இயக்குனர், (4ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா - மாங்குளத்தில் தொடர்ந்து கடும் சண்டை!

(வவுனியா)

வவுனியாவில் சிறிலங்கா அரசபடைகளுக்கும் விடுதலைப்புலிகள் போராளிகளுக்குமிடையில் தொடர்ந்து கடும் சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஹெலிக்கொப்ரர்கள் வானிலிருந்து துப்பாக்கி பிரயோகம் செய்ததுடன் விமானங்கள் குண்டு வீசியும் இராணுவத்துக்கு உதவியளித்து வருகின்ற போதிலும் இராணுவம் நகரில் இருந்து முன்னேற முடியாதபடி விடுதலைப்புலிப் போராளிகள் எதிர்த்தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

மாங்குளத்திலும் சிறிலங்கா இராணுவத்துக்கும் விடுதலைப்புலி வீரர்களுக்குமிடையில் கடும்சண்டைதொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நேற்றுக் காலையிலிருந்து நேற்று இரவு வரையிலும் யாழ் கோட்டைக்குள் இருந்து சிறிலங்கா இராணுவம் மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி ஷெல் அடித்துக் கொண்டிருந்தது.

## தமிழ்பேசும் மக்கள்மீது பாரிய தாக்குதல் முயற்சி

### ஸ்ரீலங்காப் படைகள் தயாராகின்றன

மட்டக்களப்பில் ஸ்ரீலங்காப்படை முகாம்கள் மீது புலிகள் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியுள்ளனர் என்று ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரிகள் கூறியதாக உலகச் செய்தி நிறுவனங்கள் சில செய்தி வெளியிட்டுள்ளன.

இச்செய்தியை நாம் முற்றாக மறுக்கிறோம்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் வெளியிட்ட செய்தியில் ஓர் உள்நோக்கம் நிறைந்துள்ளது.

எமது இயக்கத்தின் மீது அபாண்டமான பழியை சுமத்துவதற்காக இச்செய்தியை சிங்கள இராணுவ அதிகாரிகள் வெளியிடவில்லை. தமிழ் பேசும் மக்கள்மீது பாரிய இனப்படுகொலையை கட்டவிழ்த்து விடுவதற்காகவும், அத்தகைய இனப்படுகொலையை உலகின் முன் நியாயப்படுத்துவதற்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிரானிலும் களுவாஞ்சியிலும் 375 வீடுகள் படையினரால் எரிப்பு

### ஹெலிசுட்டு ஒருவர் மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரானில் நேற்று நண்பகல் முந்நூறு வீடுகள் சிறிலங்கா இராணுவத்தினால் தீவைத்துக் கொளுத்தப்பட்டன.

களுவாஞ்சிக் குடியில் எழுபத்தைந்து வீடுகள் இராணுவத்தினரால் தீவைத்துக்கொளுத்தப்பட்டது.

சுங்கங் கேணியில் ஹெலி சுட்டதில் நாகராசா என்பவர் மரணமானார்.

### மாங்குளத்தில் ஹெலி மீது சூடு; சிறு சேதம்!

மாங்குளத்தில் உள்ள இராணுவ முகாமிற்குள் ஹெலிக்கொப்ரர் இறங்குவதற்கு முயற்சி செய்தபோது விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைத் தொடர்ந்து சிறிது சேதத்துடன் ஹெலி இறங்காமல் திரும்பிச் சென்றது இராணுவ முகாமைச் சுற்றி விடுதலைப்புலி வீரர்கள் நிற்கிறார்கள்.

### விடுதலைப் புலிகள் ஐவர் வீரமரணம்

நேற்றுக் காலை யாழ். கோட்டை இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் ஐந்து விடுதலைப் புலி வீரர்கள் வீரமரணமடைந்தனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரஅஞ்சலியைச் செலுத்துகின்றனர்.

## போர் மூண்டதால் பாதுகாப்புக்கு ரூ.500 கோடி

### பலாலியில் இருந்து ஷெல்

(பலாலி)

நேற்று மாலை பலாலி இராணுவ முகாமில் இருந்தும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன. இதில் சில ஷெல்கள் நீண்டதூரத்துக்கும் ஏவப்பட்டன. அவ்வாறுநீண்ட தூரத்திற்கு ஏவப்பட்ட ஷெல்களில் இரண்டு கோண்டாவிலில் வீழ்ந்து வெடித்தன.

### வவுனியா மக்கள் ஓமந்தையில் தஞ்சம்

(ஓமந்தை)

வவுனியா நகரில் சிறிலங்கா இராணுவத்தின் தமிழர் மீதான தாக்குதலினால் நகரை விட்டு வெளியேறும்

## யாழ்.கோட்டைமீதுபுலிகள்தாக்குதல் நகர்மீது விமானங்கள் குண்டுவீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் டச்சுக்கோட்டையில் முகாமமைத்திருக்கும் ஸ்ரீலங்கா படையினர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று நடுச்சாமம் அளவில் ஆரம்பித்த போர் நேற்று அதிகாலை உக்கிரமாகியது. ஸ்ரீலங்கா இராணுவக் ஹெலி அதிகாலை 4-30மணியளவில்யாழ்நகரில் பல பாகங்களிலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. தொடர்ந்தாற்போல் காலை 6-30மணியளவில் இலங்கை விமானப் படையைச் சேர்ந்த குண்டு வீச்சு விமானங்கள் மூன்று யாழ்நகரில் பல பாகங்களிலும் குண்டுகளை வீசின. மக்கள் பயத்தினால் நாலாபக்கமும் பாதுகாப்பான புகலிடங்கள் தேடி ஓடியதைக் காணக் கூடியதாக இருந்தது.

நகர் வெறிச்சோடிக் கிடந்தது. பள்ளிக்கூடங்களுக்கு மாணவர்களும், ஆசிரியர்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டை ஷெல்லுக்கு யாழ் நகரில் பலர் காயம்

(விசேட நிருபர்)

பட்டனர்.

றேடி, அரச மரக்கூட்டுத்

### அகதிகள் மீது ஹெலி தாக்கு

(ஈச்சமோட்டை)

குருநகரில் இருந்து அகதிகளாக பொதுமக்கள் கொழும்புத்துறையை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் பாஷையூரடியில் ஹெலியில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இதனால் சிலர் நிலத்தில் விழுந்து உருண்டனர். ஒருவருக்கும் உயிரிழப்போ காயமோ ஏற்படவில்லை. (43)

### ஸ்ரீலங்கா அரசு போர் நிதி திரட்டுகிறது

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் தமிழ் மக்களுக்கு எதிராக பெரும் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் ஸ்ரீலங்கா அரசு சிங்கள மக்களிடம் இருந்தும், நிறுவனங்களிடம்இருந்தும் போர்நிதியை நன்கொடையாகப் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

போர் நிதியாக அரசாங்க உத்தியோகத்தரிடம்இருந்தும் சம்பளத்தில் ஒருபகுதியை பெறுவதற்கும் அரசு திட்டமிட்டுள்ளது.

### டிப்போக்குள்

# மாங்குளத்தில் ஹெலி மீது சூடு; சிறு சேதம்!

மாங்குளத்தில் உள்ள இராணுவ முகாமிற்குள் ஹெலிக்கொப்ரர் இறங்குவதற்கு முயற்சி செய்தபோது விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைத் தொடர்ந்து சிறிது சேதத்துடன் ஹெலி இறங்காமல் திரும்பிச் சென்றது இராணுவ முகாமைச் சுற்றி விடுதலைப்புலி வீரர்கள் நிற்கிறார்கள்.

## விடுதலைப் புலிகள் ஐவர் வீரமரணம்

நேற்றுக் காலை யாழ். கோட்டை இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் ஐந்து விடுதலைப் புலி வீரர்கள் வீரமரணமடைந்தனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரஅஞ்சலியைச் செலுத்துகின்றனர்.

## போர் மூண்டதால் பாதுகாப்புக்கு ரூ.500 கோடி

(கொழும்பு)

வடக்கு கிழக்குப்பகுதிகளில் யுத்த நிலமை ஏற்பட்டுள்ளதால் பாதுகாப்புச்செலவினத்திற்கென 500 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. என்று ஜனாதிபதிபிரேமதாசா கூறியுள்ளார்.

நாட்டில் உள்ள 75 லட்சம் வறியமக்களில் அரைவாசிப் பேருக்கு உதவி வழங்கப்படும் பணத்திற்கு இது சமனானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை ''சும்முதாவ'' கண்காட்சி ஏற்பாட்டுக் குழு தேசிய பாதுகாப்பு நிதிக்கென பத்து லட்சம் ரூபாவை அன்பளிப்புச்செய்திருக்கின்றது.

### போதைப் பொருள் பாவனையாளருக்கு

## ஒளிமயமான எதிர்காலத்திற்கு நல்வழி காட்டவேண்டும்

(சாவகச்சேரி)

''போதைவஸ்துபாவனைப் பழக்கம் இன்று உலகின் பல பாகங்களிலும் பற்றிப்பரவிப் படர்ந்துள்ளது. எமது சமுதாயத்திலும் இப் பாவனைப் பழக்கம் தலைதூக்குமாயின், அதனை உடனடியாகக் களைந்து, அப் பழக்கமான இருளிலிருந்து ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பும் கடமையும் எமது மக்களுக்கு உண்டு.

போதை வஸ்து, மதுபான பாவனை தடை சம்பந்தமான கருத்தரங்கு ஒன்றில்தலைமை தாங்கி உரை நிகழ்த்திய அறவழி போராட்டக் குழுத் தலைவர் திரு. கே. கோபால கிருஷ்ணன் கூறினார்.

அறவழி போராட்டக் குழுவினால் நடத்தப்பட்ட இக் கருத்தரங்குஅறவழி போராட்டக்குழு காந்தி மண்டபத்தில் நடைபெற்றது. சாவகச்சேரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உணவு போட முயற்சி

(யாழ்ப்பாணம்)

நேற்று இரவும் கோட்டை இராணுவ முகாமிற்கு ஹெலிகப்டர் உணவுப் பார்சல்களையும் மருந்துப் பார்சல்களையும் போடும் முயற்சியில் ஈடுபட்டது.

நேற்றிரவு பத்து மணியளவில் பலாலி முகாமில் இருந்து வந்த ஹெலிகப்டர் இம் முயற்சியில் ஈடுபட்டது. அப்பொழுது கோட்டை முகாமில் இருந்து ஷெல் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தது.

## பலாலியில் இருந்து ஷெல்

(பலாலி)

நேற்று மாலை பலாலி இராணுவ முகாமில் இருந்தும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன. இதில் சில ஷெல்கள் நீண்டதூரத்துக்கும் ஏவப்பட்டன. அவ்வாறுநீண்ட தூரத்திற்கு ஏவப்பட்ட ஷெல்களில் இரண்டு கோண்டாவிலில் வீழ்ந்து வெடித்தன.

## வவுனியா மக்கள் ஓமந்தையில் தஞ்சம்

(ஓமந்தை)

வவுனியா நகரில் சிறிலங்கா இராணுவத்தின் தமிழர் மீதான தாக்குதலினால் நகரை விட்டு வெளியேறும் மக்கள் கிராமப் புறங்களை நோக்கி இடம் பெயர்ந்து வருகின்றனர்.

இவ்வாறு இடம் பெயர்ந்தவர்களில் ஒரு பகுதியினர் ஓமந்தை மகாவித்தியாலயத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

## திருமலையில் இருந்து அகதிகள்

(திருமலை)

திருமலையில் தொடர்ந்தும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் வன்முறைகள் தொடர்வதினால் பெருந்தொகையான மக்கள் அங்கிருந்து வெளியேறியவண்ணமுள்ளனர்.

அவ்வாறு வெளியேறிய மக்கள் முல்லைத்தீவிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் அகதிகளாக வந்துள்ளனர்.

## விமான உரையாடல் எவ். எம்மில்

நேற்று காலை பொம்பர் விமானம் பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி குண்டு வீசும் பொழுது விமானத்தில் இருந்து கதைத்தது எல்லாம் இலங்கை வானொலியில் அதாவது FM மீற்றரில் கேட்கக்கூடியதாக இருந்தது மீற்றர் கிளியர் இல்லாமல் இருந்தாலும் கூட கதைகள் எல்லாம் சிங்களத்திலேயே இருந்தது. (43)

# யாழ்.கோட்டைமீது புலிகள் தாக்குதல் நகர்மீது விமானங்கள் குண்டுவீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் டச்சுக்கோட்டையில் முகாமமைத்திருக்கும் ஸ்ரீலங்கா படையினர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று நடுச்சாமம் அளவில் ஆரம்பித்த போர் நேற்று அதிகாலை உக்கிரமாகியது. ஸ்ரீலங்கா இராணுவக் ஹெலி அதிகாலை 4-30மணியளவில்யாழ்நகரில் பல பாகங்களிலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. தொடர்ந்தாற்போல் காலை 6-30மணியளவில் இலங்கை விமானப் படையைச் சேர்ந்த குண்டு வீச்சு விமானங்கள் மூன்று யாழ்நகரில் பல பாகங்களிலும் குண்டுகளை வீசின. மக்கள் பயத்தினால் நாலாபக்கமும் பாதுகாப்பான புகலிடங்கள் தேடி ஓடியதைக் காணக் கூடியதாக இருந்தது.

நகர் வெறிச்சோடிக் கிடந்தது. பள்ளிக்கூடங்களுக்கு மாணவர்களும், ஆசிரியர்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கோட்டை ஷெல்லுக்கு யாழ் நகரில் பலர் காயம்

(விசேட நிருபர்)

நேற்று அதிகாலை யாழ்-கோட்டை முகாமில் இருந்து ஏவப்பட்ட 'நூற்றுக் கணக்கான ஷெல்களில் குருநகர் பகுதியில் இரண்டும் யாழ்-நீராவியடி மணிக்கூட்டு ஒழுங்கை வீடொன்றிலும் வீழ்ந்து வெடித்ததில் பலர் காயமடைந்தனர்.

மணிக்கூட்டு ஒழுங்கையில் ஆறுமுகம் என்பவர் வீட்டில் இருவர் காயத்துக்கு உள்ளாகினர்.

குருநகர் புனித யாகப்பர் ஆலய மேற்குப் பக்கம் வீழ்ந்த ஷெல் ஆலயத்தைச் சேதப்படுத்தியுள்ளது.

குருநகர் சென் செபஸ்தியன் வீதியில் கனகரத்தினம், யோகம் ஆகியோரது வீட்டில் ஷெல் வீழ்ந்ததில் வல்லிபுரம் கனகரத்தினம் (வயது 60) கனகரத்தினம் கிருஷ்ணகுமார் (வயது 19) ஆகியோர் காயமடைந்தனர்.

ஹெலி சுட்டதில் மூன்றாம் குறுக்கு வீதியைச் சேர்ந்த திருமதி திருநாவுக்கரசு (வயது 60) அடப்பன் வீதியைச் சேர்ந்த திருமதி ஜெயவதி யேசுதாஸ் (வயது38) ஆகியோர் காயங்களுக்கு உள்ளாகினர்.

காயமடைந்தவர்கள் யாழ்-கடற்கரை வீதி திருச்சிலுவை சுகநல சேவை நிலயத்தில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

குருநகர் புனித காணிக்கை (புதுமை) மாதா ஆலயம் ஹெலித் தாக்குதலுக்குள்ளானது.

றேடி, அரச மரக்கூட்டுத் தாடல் வளவில் பொம்பர் குண்டுடொன்று வீழ்ந்து வெடித்தது. அதில் எவரும் பாதிக்கப்படவில்லை. (21)

## ஸ்ரீநகரில் ஹோட்டல் மீது தாக்குதல் 4 பொலிஸார் மரணம்

(ஸ்ரீநகர்)

ஸ்ரீநகரில் இந்திய மத்திய றிசேவ் பொலிஸார் தங்கியிருந்த இரு ஹோட்டல்கள் மீது காஷ்மீர்தீவிரவாதிகள் ரொக்கட் தாக்குதலை மேற்கொண்டதினால் நான்கு பொலிஸார் கொல்லபபட்டனர். இப் பொலிஸ்படையினர் காஷ்மீர் பொலிஸிற்குத் துணையாக மத்திய அரசால் டில்லியில் இருந்து அனுப்பிவைக்கப்பட்டவர்கள் ஆகும்.

டாஸ் ஏரிக்கரையில் உள்ள இவ் இரு ஹோட்டல்கள் மீதும இவ் ஏரியில் இருந்த படகுகளில் இருந்தே தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது.

இத் தாக்குதல்களுக்குப் பயன் படுத்தப்பட்ட ராக்கட்டுகள் 'பாகிஸ்தானில் உள்ள முகாமீதீன் கெரிலாக்கலால் காஷ்மீர் தீவிரவாதிகளுக்குக் கிடைத்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## காங்கேசனில் மா கப்பல்

(காங்கேசன்துறை)

1500 மெற்றிக் தொன் மாவுடன் கப்பலொன்று காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. இக்கப்பலில் இருந்து மா இறக்கும் வேலைகள் இன்று ஆரம்பிக்கப்படலாம் எனவும் தெரியவருகின்றது.

இம் மா கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்படின் மா தட்டுப்பாடு ஓரளவு நீங்கும் எனத் தெரிகிறது.

## பொலிஸார் வீடுகளில் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு பகுதியில் பொலிஸ் நிலையங்களை விடுதலைப்புலிகள் முற்றுகையிட்டபோது தமது சொந்த இடங்களை விட்டு அப் பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றிய தமிழ்ப் பொலிஸார்கள் தற்பொழுது அப்பகுதியில் இருக்கும் இன்ஸ்பெக்டர் வீடுகளில் தஞ்சமடைந்திருப்பதாகத் தெரியவருகின்றது.

இப் பொலிஸார் தமது சொந்த இடங்களுக்கு திரும்புவதற்கு போக்குவரத்துச் சீரின்மையே காரணம் எனத் தெரியவருகின்றது.

## ஸ்ரீலங்கா அரசு போர் நிதி திரட்டுகிறது

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் தமிழ் மக்களுக்கு எதிராக பெரும் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் ஸ்ரீலங்கா அரசு சிங்கள மக்களிடம் இருந்தும், நிருவனங்களிடம்இருந்தும் போர்நிதியை நன்கொடையாகப் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

போர் நிதியாக அரசாங்க உத்தியோகத்தரிடம்இருந்தும் சம்பளத்தில் ஒருபகுதியை பெறுவதற்கும் அரசு திட்டமிட்டுள்ளது.

## டிப்போக்குள் போகமுடியாது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பஸ் டிப்போவிற்கு அண்மையில் இராணுவம் நிலைகொண்டிருப்பதால் தற்பொழுது டிப்போவிற்குள் பஸ்கள் செல்லமுடியாது உள்ளது. இதனால் பஸ்சேவைகள் பெரிதும் சீர்கேடு அடைந்துள்ளது. பழுதடைந்த பஸ்களும்திருத்தமுடியாதநிலையில் உள்ளன.

## சோவியத் விமானம் கடத்தல்

(மொஸ்கோ)

ஐம்பது பயணிகளுடன் உள்நாட்டு சேவையில் ஈடுபட்டிருந்த சோவியத் அரசிற்குசொந்தமான விமானம்கடத்தப்பட்டது இவ்விமானம்பின்லாந்தின் தலைநகருக்கு கடத்திசெல்லப்பட்டது. விமானம் தலை நகரில் இறக்கப்பட்டதும் பின்லாந்துப்பொலிசார் அதனை சுற்றிவளைத்துக்கொண்டனர் அதில் இருந்த கடத்தல் காரர்களும் சரணடைந்து விட்டார்கள்

# யாழ்ப்பாண ஆஸ்பத்திரியை விட்டு நோயாளர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலையில் நோயாளர்களோ, ஊழியர்களோ, வைத்தியர்களோ இல்லாததினால்வெறிச்சோடிக் காணப்படுகிறது.

யாழ். கோட்டை முகாமிலுள்ள ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் கடந்த திங்கள் இரவு நகரை நோக்கி நடத்திய ஷெல் தாக்குதல் காரணமாக பீதியடைந்த நோயாளிகளும், வைத்தியசாலை ஊழியர்களும் இரவோடு இரவாக தமது வீடுகளுக்குச்சென்று விட்டனர். நடக்க முடியாமல் நிலமை மோசமாக இருந்த நோயாளர்கள் அவசர அவசரமாக வேறு இடங்களிலுள்ள அரசினர் வைத்திய சாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளனர். இதனால் யாழ். போதனா வைத்தியசாலையில் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக்காணப்படுகிறது. (ம)

# எமது வீரம் செறிந்த போராட்டத்தில் முஸ்லிம் சகோதரருக்கும் பங்குண்டு

**- பாப்பா**

(சாவகச்சேரி)

தமிழ் மக்களினது உரிமைகளைக் கொடுக்க ஸ்ரீலங்கா அரசும், சிங்கள மக்களும் மறுத்தபோது, சுதந்திரதாகம் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றது. எமது வீரம் செறிந்த போராட்டத்தில் இதுவரை பல இளைஞர்கள் செங்குருதியைச் சிந்தி, தமது இன்னுயிரைத்தியாகம்செய்து எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு உர மூட்டினார்கள் அதில் மதத்தால் வேறுபட்டாலும் மொழியால், தாயக மண்ணால் ஒன்றுபட்ட பல முஸ்லிம் சகோதரர் பங்கெடுத்து வீரமரணமடைந்துள்ளனர் என்பதை தமிழ் பேசும் நல்லுலகம் என்றும் மறந்துவிட முடியாது''

சாவகச்சேரி பஸ்நிலைய மைதானத்தில் நடைபெற்ற வீரவேங்கை அசீம் அஷாத்தின் முதலாவது நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சிப் பிரதேச அரசியற் பொறுப்பாளர் திரு. பாப்பா மேற் கண்டவாறு கூறினார்.

சாவகச்சேரி மொகதீன் ஜும்மா பள்ளிவாசல் அறக்காவலர் சபை செயலாளர் ஜனாப் எம்.பீ. அஸீஸ் தலைமையில் நடைபெற்ற இந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஐரோப்பிய நாடுகள்

# தென் ஆபிரிக்கா மீது பொருளாதாரத் தடை விதிக்கக் கோரிக்கை

(ஒட்டாவா)

''இனவாத தென்னாபிரிக்க அரசுக்கு எதிரான பொருளாதாரத் தடையை ஐரோப்பிய நாடுகள் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்'' என்று தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் திரு. நெல்சன் மண்டேலா மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

மூன்று நாள் உத்தியோக பூர்வ பயணமொன்றினை மேற்கொண்டு கனடா சென்றுள்ள திரு. மண்டேலா ஒட்டாவாவில் வைத்து இதனை தெரிவித்துள்ளார். கனடாவின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்ய உள்ள அவர் அந்நாட்டு பாராளுமன்றத்திலும் சிறப்பு உரை நிகழ்த்த உள்ளார்.

ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ள தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் உட்பட அனைத்து அகதிகளையும் மீண்டும் தமது சொந்த பூமியில் வாழ்வதற்கான ஏற்பாட்டினையும் ஐரோப்பிய நாடுகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

1985ஆம் ஆண்டுக்கு பின்பு நிறவெறி பிடித்த தென்னாபிரிக்க அரசின் கெடுபிடிகளால் தேசிய காங்கிரசைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கானோர் ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த அகதிகளை மீண்டும் தென்னாபிரிக்காவில் குடியமர்த்த எப்படியான நடவடிக்கை மேற்கொள்வது என்பது பற்றி ஐரோப்பிய நாடுகள் ஆராய்ந்து வருவதாகவும் தெரிய வருகின்றது.

## சுற்றாடலைப் பாதுகாப்பதில் 3ம் உலகம் அக்கறையில்லை

(கோலாலம்பூர்)

'சுற்றாடலைப்பாதுகாக்கும் விடயத்தில் வளர்முக நாடுகள் போதிய நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை' என்று மலேசிய விஞ்ஞான தொழில் நுட்ப சுற்றாடல் துறை அமைச்சர் திரு ஸ்ரிபன் யான் குற்றம் சாட்டியுள்ளார்

கைத்தொழில் நாடுகளின் மூலமே எழுபத்தைந்து வீதத்துக்கு மேலான சுற்றாடல் பாதிப்பு ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிராந்திய சுற்றாடலைப் பாதுகாத்தல் மிகவும் அவசியமான ஒன்று என்று வலியுறுத்தியுள்ள அமைச்சர் இது விடயத்தில் இப்பிராந்திய நாடுகள் அனைத்தும் ஒரு கூட்டு நிலைப்பாட்டினை கடைப்பிடிக்க வேண்டுமென்றும் தென்கிழக்காசிய நாடுகளின் சங்கத்தை வற்புறுத்தியுள்ளார்.

## பதவி விலகல்

(டில்லி)

நாகலாந்து மாநில அரசின் முதலமைச்சர் திரு கெகெல்சிசி தாம் பதவி விலகப் போவதாக அறிவித்துள்ளார்

நாகலாந்து மக்கள் சபையின் ஒற்றுமையையும்' மத்தியில் தேசிய முன்னணி அரசின் மொத்த நலனையும் பாதுகாக்கவே தாம் பதவி விலகுவதாக கூறியுள்ள முதலமைச்சர் தாம் இந்திரா காங்கிரசுடன் எவ்வித தொடர்பையும் வைத்துக்கொள்ளப் போவதில்லை என்றும் அறிவித்துள்ளார்.

## இந்தியா - பாகிஸ்தான் பேச்சுவார்த்தை இணக்கம்

(டில்லி)

காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக பாக்கிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும்இடையில்பேச்சுவார்த்தைநடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மாத முடிவுக்குள் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரில் இடம் பெற்று வரும் கலவரங்களுக்கு பாகிஸ்தான் தான் முக்கிய காரணம் என இந்தியா குற்றம் சாட்டி வந்தது.

மறுவளமாக பாக்கிஸ்தான் இந்தியா ஜம்மு காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை மதிக்கவில்லை என குற்றஞ் சாட்டியது.

இவ்வாறாசநீண்ட காலமாக இவ்விரு நாடுகளுக்கும் இடையில் நீடித்து வரும் பிணக்குகளை அகற்றும் வகையில் இந்தியா மேற் கொண்டுள்ள இந்த முயற்சியை பாகிஸ்தான் வரவேற்றதுடன் இந்தமுயற்சி சாதகமான பயனைஅளிக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்தது.

இரு நாடுகளுக்கும் இடையிலான இப் பேச்சு வார்த்தைகளின் போது ஒரு நாட்டைப் பற்றி மற்றைய நாடு எதிர்ப் பிரச்சாரம் மேற் கொள்வதை நிறுத்தல், புதிய எல்லைகளில் இருந்து பனழய எல்லைகளுக்கு வாபஸாகி செல்லுதல் உட்பட பல முக்கிய பிரச்சினைகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இவ் இரு நாடுகளுக்கிடையிலான பேச்சு வார்த்தைகள் சட்டம் கட்டமாக நடத்தப்படும்.

முதலாம் கட்டப் பேச்சு வார்த்தைகளில் இரு நாடுகளின் உயர் அதிகாரிகள் மாத்திரமே கலந்து கொள்ள உள்ளதுடன் வெளிவிவகார அமைச்சர்கள் எவரும் கலந்து கொள்ள மாட்டார்கள் என்றும் கூறப்பட்டது.

## இலங்கை உள்விவகாரங்களில் இந்தியா தலையிடாது

(டில்லி)

இலங்கையின் உள்விவகாரங்களில் இந்தியா தலையிடமாட்டாது என்று இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ.கே. குஜ்ரால் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஸ்டான்லி கல்பகேயை சந்தித்த போதே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் தீவிரவாதிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையே நடைபெறும் யுத்தம் இது என்றும் சென்ற தடவை போன்று இந்தியா இவ் விஷயத்தில் தலையிடாது என்றும் உறுதியளித்ததாக ஸ்டான்லி கல்பகே கூறினார்.

இப்பிரச்சினைகளுக்கு பேச்சு வார்த்தை மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்.

## ஜனதாதள் அமோக வெற்றி

பீகாரில் லோச்சபா தொகுதியான சாப்ரா தொகுதியில் இடம் பெற்ற இடைத்தேர்தலில் போட்டியிட்ட ஜனதாதள் வேட்பாளர் திரு லால் கபூராய் அமோக வெற்றியீட்டியுள்ளார்.

தன்னுடன் போட்டியிட்ட இந்திரா காங்கிரஸ் வேட்பாளரான திரு ராஜீவ் ரஞ்சன் சிங்கை இவர் ஒருலட்சத்து பதினாறாயிரம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பேச்சுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு சைவ சமயம் சம்பந்தமான பேச்சுப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

ஆலய வழிபாடு அல்லது சைவ சமயம் என்னும் தலைப்புக்களில்,

இம்மாதம் 28ஆம் திகதி நடைபெறவுள்ள இப்போட்டி இரு பிரிவாக நடத்தப்படவுள்ளதுடன், வெற்றி பெறுவோருக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.


மனோகரா - (யாழ்)
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு 10-30, 2-30. 6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி கௌதமி, ரகுவரன், S. S. சந்திரன், பேபி ஷாலினி, சரளா நடித்த
ராஜா சின்ன ரோஜா

கவுஸ்புல் காட்சியாக வெற்றிநடை போடுகிறது
வெலிங்டன் (யாழ்)
தினசரி 4.00, 7.00, 9.45
சனி. ஞாயிறு விடுமுறை நாட்களில் 10.30, 2.30, 6.30, 9.30
ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் பரிசு பெற்ற
விசு, லக்ஷ்மி, ரகுவரன், இளவரசி நடித்த
A.V M. இன்
சம்சாரம் அது மின்சாரம்
(கலர்)

லிடோ (யாழ்)
தினசரி 4-00, 6-45, 9-45
சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில் 10-30, 2-30, 6-45, 9-40
ரஜனி, அம்பிகா, ஜெயசங்கர் சுஜாதா, நாகேஸ் நடித்த
மாவீரன்
(புதிய பிரதி)

ராஜா (யாழ்)
தினசரி 4·00, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில் 4 காட்சிகள்
மோகன், ரேவதி, கார்த்திக் நடித்த
மௌனராகம்
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்.
அடுத்த புதிய வெளியீடு கமல், கௌதமி நடித்த அபூர்வ சகோதரர்கள்

வின்ஸர் (யாழ்)
தினசரி 4-00, 6-45, 9-40
விடுமுறை நாட்களில் 10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

யாழ் மக்களுக்கு புதியதோர் சேவை !
குறுகிய காலத்தில் தரமான கலர் பிலிம் விரைவாக கழுவுவதற்கு
Cosmos Marketing Services
1st Floor,
337, Kasthuriar Road,
JAFFNA.
(B/1160)


## 'இத்தாலியா -90' இரண்டாம் கட்டத்தை நோக்கி

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் முதலாவது சுற்றின் இறுதிக் கட்டத்தையடைந்துள்ளன. 6 பிரிவுகளில் 'பீ' பிரிவுக்குரிய ஆட்டங்கள் அனைத்தும் முடிவடைந்து விட்டன. தற்போதைக்கு ஒவ்வொரு பிரிவிலும் சில அணிகள் இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன, இத்தாலி செக்

தன்னகத்தே கொண்டிருந்த அணி இவர்கள் தான். இம்முறை 'பி' பிரிவின் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளவர்கள்.

இவர்கள் கடந்த இரு வருடங்களாக ஆபிரிக்காவின் தலை சிறந்த அணியாகத் திகழ்ந்து வருகிறார்கள். உலகக்கிண்ணத்துக்குத் தகுதி பெறுமுகமாக நடைபெற்ற

பியாக் போல் லூயிஸ், ஏர்னஸ்ட் எபொஸ்து ஆகியோர் பிரான்சியக் கழகங்களுக்கு ஆடிக்கொண்டிருப்பவர்கள்.

கமரூன் அணியின் பயிற்றுனராகக் கடமையாற்றுபவர் சோவியத் ரஷ்யாவைச் சேர்ந்த நெப்போமினியாச். இவர் எத்தகு திறமை வாய்ந்தவர் என்பதை கமரூன் வீரர்களின் மூலமாக இத்தாலியில்

வெற்றிபெற்ற கமரூன் அணியைச் சோவியத் ரஷ்யா 4 – 0 என்ற கோல் வித்தியாசத்தில் தோற்கடித்துள்ளது.

இன்றைய ஆட்டங்கள்:

பிரிவு 'சி'

பிரேசில் - ஸ்கொட்லாந்து

சுவீடன் - கோஸ்டாரிக்கா

மொத்த நலனையும் பாதுகாக்கவே தாம் பதவி விலகுவதாக கூறியுள்ள முதலமைச்சர் தாம் இந்திரா காங்கிரசுடன் எவ்வித தொடர்பையும் வைத்துக்கொள்ளப் போவதில்லை என்றும் அறிவித்துள்ளார்.

வெளியுறவு அமைச்சர் ஐ.கே. குஜ்ரால் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஸ்டான்லி கல்பகேயை சந்தித்த போதே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

போன்று இந்தியா இவ் விஷயத்தில் தலையிடாது என்றும் உறுதியளித்ததாக ஸ்டான்லி கல்பகே கூறினார்.

இப்பிரச்சினைகளுக்கு பேச்சு வார்த்தை மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்.

யீட்டியுள்ளார்.

தன்னுடன் போட்டியிட்ட இந்திரா காங்கிரஸ் வேட்பாளரான திரு ராஜீவ் ரஞ்சன் சிங்கை இவர் ஒருலட்சத்து பதினாறாயிரம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆலய வழிபாடு அல்லது சைவ சமயம் என்னும் தலைப்புக்களில்,

இம்மாதம் 28ஆம் திகதி நடைபெறவுள்ள இப்போட்டி இரு பிரிவாக நடத்தப்படவுள்ளதுடன், வெற்றி பெறுவோருக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.


கழுவுவதற்கு

**Cosmos Marketing Services**

1st Floor,
337, Kasthuriar Road,
**JAFFNA.**

(B/1160)


# 'இத்தாலியா-90' இரண்டாம் கட்டத்தை நோக்கி

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் முதலாவது சுற்றின் இறுதிக் கட்டத்தையடைந்துள்ளன. 6 பிரிவுகளில் 'பீ' பிரிவுக்குரிய ஆட்டங்கள் அனைத்தும் முடிவடைந்து விட்டன. தற்போதைக்கு ஒவ்வொரு பிரிவிலும் சில அணிகள் இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன, இத்தாலி செக்கோஸ்லோவாக்கியா, ஆர்ஜென்டீனா, கமரூன், பிரேசில், மே. ஜேர்மனி, பெல்ஜியம் ஆகியவையே அவை. இரண்டாம் சுற்றில் மொத்தம் 16 அணிகள் இடம்பெறும் ஏனைய அணிகள் எவை என்பதை இன்னும் ஒரு சில தினங்களில் அறிந்து கொள்ள இயலும். அடுத்த கட்ட ஆட்டங்கள் அணிகளின் பலப்பரீட்சைக்குப் பெரும் சவாலாக இருக்கப் போகின்றன. ஏனெனில் இவை நொக் அவுட் முறைப்படி நடைபெறப் போகின்றன. அதாவது தோல்வி காணும் அணி போட்டியில் இருந்து நீக்கப்படும். எனவே ஒவ்வொரு அணியும் கிடைக்கும் சகல சந்தர்ப்பங்களையும் உச்சமாகப் பயன்படுத்த வேண்டும்.

### யார் அந்த 16 அணிகள்

'ஏ' பிரிவில் இத்தாலியும், செக்கோஸ்லோவேக்கியாவும் இதுவரையிலான ஆட்டங்களில் திறமையாகச் செய்துள்ளன. இவை இரண்டும் தலா இரண்டு ஆட்டங்களில் வெற்றி பெற்றுள்ளன. ஆஸ்திரியாவும், ஐ. அமெரிக்காவும் இன்னமும் ஒரு வெற்றியையும் பெற்றுக் கொள்ள இயலவில்லை. இன்னமும் ஒவ்வொரு ஆட்டங்கள் இவைக்கு இருக்கின்றன. அதுவும் இவர்கள் இருவருமே மோதிக் கொள்வர். இத்தாலி, செக்கோஸ்லோவாக்கியாவை எதிர்த்தாடும்.

'பீ' பிரிவு ஆட்டங்களைப் பொறுத்தவரை சகல ஆட்டங்களும் முடிவடைந்து விட்டன. விளையாடிய மூன்று ஆட்டங்களிலும் இரண்டு வெற்றிகளைப் பெற்று 4 புள்ளிகளுடன் கமரூன் முதலிடம் வகிக்கிறது. ஆர்ஜென்டீனா 3 புள்ளிகளையும், சோவியத் ரஷ்யா, றோமானியா இவ்விரண்டு புள்ளிகளையும் பெற்றுள்ளன. தனது இறுதியாட்டத்தில் சோவியத் ரஷ்யா அற்புதமாக ஆடி கமரூன் அணியை 4-0 என்ற கோல் வித்தியாசத்தில் மிகச் சிறப்பாக வெற்றி பெற்றுள்ளதைக் குறிப்பிட வேண்டும். இருந்தும் 2 ஆட்டங்களில் தோல்வி என்ற வகையில் சோவியத் ரஷ்யா தொடர்ந்து ஆடும் சர்ந்தர்ப்பத்தை இழக்க மூன்றாவது இடத்தை றோமானியா பெற்றுத் தகுதி பெறுகின்றது.

'சி' பிரிவில் ஆட்டங்களின் இடைநிலையிலேயே பிரேசில் இரண்டு வெற்றிகளுடன் அடுத்த கட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது. ஸ்கொட்லாந்து கோஸ்டாரிக்கா இரண்டும் தலா ஒவ்வொரு ஆட்டங்களில் வெற்றி பெற்றுள்ளன. சுவீடன் தான் ஆடிய இரண்டு ஆட்டங்களிலும் தோற்று விட்டது.

'டி' பிரிவில் இரண்டு ஆட்டங்களில் வெற்றிபெற்று மே. ஜேர்மனி ஏலவே அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுவிட்டது. இப்பிரிவின் ஏனைய அணிகளான கொலம்பியா, யூகோஸ்லாவியா என்பன தலா ஒவ்வொரு வெற்றியைப் பெற்றுள்ளன. ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இரண்டு ஆட்டங்களிலும் தோற்றுப் போயிற்று. அடுத்து இப்பிரிவில் தகுதி பெறும் சந்தர்ப்பம் உள்ள அணிகள் யூகோஸ்லாபியா கொலம்பியாவுமாகும். ஆனால் யூகோஸ்லாவியா ஐக்கிய அரபு எமிரேட்சை சந்திக்க இருப்பது யூகோஸ்லாபியாவுக்கு இலகுவானதாக இருக்கும். கொலம்பியா மே. ஜேர்மனியைச் சந்திக்க இருப்பது மிகக் கஷ்டமானதாகவே இருக்கப்போகிறது.

'ஈ' பிரிவில் தென் கொரியா, உருகுவே இரண்டையும் தோற்கடித்து பெல்ஜியம் இரண்டு வெற்றிகளுடன் தகுதி பெற்று விட்டது. ஸ்பானியா ஒரு ஆட்டத்தில் வெற்றிபெற்றுள்ளது. துரதிஸ்டவசமாக சிறந்ததொரு அணியான உருகுவே ஒரு ஆட்டத்திலும் வெற்றிபெற இயலவில்லை. ஒரு தோல்வியையும். ஒரு சரி சமத்தையும் மட்டுமே பெற முடிந்துள்ளது. இருந்தும் இறுதி ஆட்டத்தில் உருகுவே தென்கொரியாவைச் சந்திக்க இருப்பது உருகுவேக்கு ஒரு நம்பிக்கையைக் கொடுக்கக் கூடும்.

### சுவாரஸ்யமான பிரிவு:

இறுதியான அணி 'எப்' அணியாகும். எதிர்பார்த்தது போலவே இப்பிரிவு எதிர்வு கூறலுக்கு மிகவும் கடினமான அணியாகக்



காணப்படுகின்றது. ஒல்லாந்து, இங்கிலாந்து அயர்லாந்து ஆகிய மிகப்பலம் கொண்ட நாடுகளும், அதே வேளை இரண்டாம் தரமாக மதிப்பிடமுடியாத எகிப்தும் இப்பிரிவில் அடங்கியுள்ளன. மொத்தம் உள்ள 6 ஆட்டங்களில் 4 ஆட்டங்கள் முடிந்துள்ள இவ்வேளையில் எந்தவொரு அணியும் எந்தவொரு ஆட்டத்திலும் வெல்லவுமில்லை தோற்கடிக்கவும் இல்லை என்பது அவதானத்துக்குரிய சுவையான அம்சமாகும். இதனால் இப்பிரிவில் இன்னமும் யாரும் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெறவில்லை. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் எகிப்தின் திறமையாகும். அயர்லாந்துடனும், சிறப்பாக ஒல்லாந்துடனும் இவ்வணி சரி சமமாகப் போட்டியை முடித்துள்ளது. புள்ளி அடிப்படையில் பார்த்தாலும் ஒவ்வொரு அணியும் 2 புள்ளிகளைப் பெற்றுள்ளன. நாளை இங்கிலாந்துக்கெதிராக எகிப்தும் அயர்லாந்துக்கெதிராக ஒல்லாந்தும் ஆடும் போது ஏதாவது மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம்.

### யார் இவர்கள்

'பீ' பிரிவில் இடம் பெற்ற ஆட்டங்களில் ஆர்ஜென்டீனாவுக்கும் மேலாக, றோமானியாவுக்கும் மேலாக இருவரையும் தோற்கடித்து, புள்ளியடிப்படையில் சோவியத் ரஸ்யாவையும் பின்தள்ளியுள்ள அணி கமரூன். மேற்கு ஆபிரிக்காவில் உள்ள இந்நாடு உலகக் கிண்ணப் போட்டிகளுக்குப் புதிய நாடல்ல. 1982 உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றிய நாடு. எந்தவொரு போட்டியிலும் தோல்வியுறாத நிலையிலும் கூட, தெரிவு முறையினால் தொடர்ந்தும் இறுதியாட்டத்துக்கு வரும் சந்தர்ப்பத்தை இழந்த நாடு. அது மட்டுமன்றி 82 உலகக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் உலகத்தின் சிறந்த கோல் காப்பு வீரர்களில் ஒருவரைத் தன்னகத்தே கொண்டிருந்த அணி இவர்கள் தான். இம்முறை 'பி' பிரிவின் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளவர்கள்.

இவர்கள் கடந்த இரு வருடங்களாக ஆபிரிக்காவின் தலை சிறந்த அணியாகத் திகழ்ந்து வருகிறார்கள். உலகக்கிண்ணத்துக்குத் தகுதி பெறுமுகமாக நடைபெற்ற முன்னோடி ஆட்டங்களில், அங்கோலா, கபொன், நைஜீரியா முதலிய நாடுகளைத் தோற்கடித்தவர்கள் இறுதியாட்டத்தில் டியூனிசியாவைத் தோற்கடித்து இன்று இத்தாலி வந்து சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**நிர்மலன்**

கமரூன் அணியின் பல வீரர்கள் ஐரோப்பிய அணிகளுக்காக விளையாடிக் கொண்டிருப்பவர்கள் உலகின் சிறந்த இரு கோல் காப்பு வீரர்களான அன்டன் பெல் பிரான்சிலும் தோமஸ் நிக்கோனோ ஸ்பானியாவில் கழகங்களுக்காக ஆடிக்கொண்டிருப்பவர்கள் மேலும், முபோ கானா பியாக் போல் லூயிஸ், ஏர்னஸ்ட் எபொஸ்தே ஆகியோர் பிரான்சியக் கழகங்களுக்கு ஆடிக்கொண்டிருப்பவர்கள்.

கமரூன் அணியின் பயிற்றுனராகக் கடமையாற்றுபவர் சோவியத் ரஷ்யாவைச் சேர்ந்த நெப்போமினியாச். இவர் எத்தகு திறமை வாய்ந்தவர் என்பதை கமரூன் வீரர்களின் மூலமாக இத்தாலியில் நிருபித்துக் கொண்டிருக்கிறார்.

ஐரோப்பிய விளையாட்டுப் பாணிகள் ஆபிரிக்க வேகம் நிறைந்த பலம் சோவியத் ரஷ்ய நுட்பங்கள் எல்லாம் ஒன்றாக இணைந்த கமரூன் அணி இத்தாலியா 90ல் கதாநாயகனாகத் திகழ்ந்து கொண்டிருப்பது ஆச்சரியம் இல்லை.

### கமரூன் தோல்வி

திங்களன்று நடைபெற்ற 'பி' பிரிவு இரண்டு ஆட்டங்களில் ஒன்றில் ஆர்ஜென்டீனா றோமானியாவுடன் ஒவ்வொரு கோலுடன் சமன் செய்து கொண்டது. இன்னொரு ஆட்டத்தில் இரண்டு ஆட்டங்களில் தொடர்ந்து வெற்றிபெற்ற கமரூன் அணியைச் சோவியத் ரஷ்யா 4-0 என்ற கோல் வித்தியாசத்தில் தோற்கடித்துள்ளது.

இன்றைய ஆட்டங்கள்:

பிரிவு 'சி'

பிரேசில் - ஸ்கொட்லாந்து

சுவீடன் - கோஸ்டாரிக்கா

## வர்த்தகசங்கத்தின் வேண்டுகோள்

(சாவகச்சேரி)

இன்றைய நாட்டின் போராட்ட சூழ் நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு சாவகச்சேரி வர்த்தகர்களோ, வர்த்தக நிலையங்களோ மக்களின் பாவனைப் பொருட்களை விலை கூட்டி விற்கக் கூடாது என்று சாவகச்சேரி வர்த்தகர் சங்கம் ஓர் அவசர அறிவித்தலை விடுத்துள்ளது.

(35)


# பிடவை மின்தறி நிலையம்

✱ மின்தறியில் வேலைசெய்து அனுபவமுள்ள பெண் பணியாளர்கள் தேவை

✱ அனுபவமற்றவர்களுக்கும் வேதனத்துடன் பயிற்சி அளிக்கப்படும்

✱ தங்குமிட வசதிகள் உண்டு

நேரில் வரவும்

**லீனா ரெக்ஸ் இன்டஸ்றி**

(லங்கா) லிமிட்டெட்

புத்தூர்.

(B/1181)

சிந்தனைக்கு

பலக் குறைவே கொடுமை
அனைத்துக்கும் ஊற்றுவாய்

செனெகா

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 20-06-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# தமிழருக்கு எதிரான போர் பிரகடனம்

பேச்சுவார்த்தை மூலம் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதே தமது அரசின் கொள்கை என்று கூறிவந்தவர் சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்கபிரேமதாசா.

இப்பொழுது தமிழ் மக்களுக்கு எதிராக சிறிலங்கா ஜனாதிபதி போர்ப்பிரகடனம் செய்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜே.வி பிக்கு நேர்ந்தகதியே விடுதலைப்புலிகளுக்கும் ஏற்படுமென்றும் கூறுகிறார் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா.

சொல்வதுடன் நிறுத்திவிடாது இந்த விஷயத்தில் செயலிலும் துரிதமாக இறங்கியிருக்கிறது பிரேமதாசா அரசு.

தேசியபந்தோபஸ்து அமைச்சராக தர்மிஷ்டரின் அமைச்சரவையில் லலித் அத்துலத்முதலி இருந்தபோது இஸ்ரேலிய மொஸாட், எஸ். ஏ. எஸ். போன்ற கூலிப்படைகளின் பேடித்தனமான போர்முறையை இங்கு வடக்குக் கிழக்கு மாகாணங்களில் செயல் படுத்தினார்.

தமிழினத்தை அழிப்பதற்கும் கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களைக் கொண்டுவந்து குடியேற்றுவதற்கும் பல தந்திரங்களை அத்துலத்முதலி கையாண்டார்.

வடமராட்சியில் பிரசித்திபெற்ற ''லிபரேஷன் ஒப்பறேஷன்'' நடத்தினார்.

தமிழினத்தை முற்றாக அழிக்க முடியாதது மட்டுமல்ல தமிழினத்தின் விடுதலை உணர்வையும் அழிக்க முடியவில்லை. விடுதலைப்புலிகளின் விடுதலை வேட்கையையும் அத்துலத்முதலியினால் தணிக்க முடியவில்லை!

இன்று பிரேமதாசா அரசும் அதே பேடித்தனமான போர் முறையைப் பின்பற்றி பொதுமக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளை நோக்கி ஷெல் அடித்துக் கொண்டிருக்கிறது; ஹெலியிலிருந்து கண்மூடித்தனமாக சுட்டுத்தள்ளுகிறது, குண்டுவீச்சு விமானங்கள் குண்டு வீசித்தாக்குகின்றன!

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்குமிடையில்தான்போர் நடக்கிறது என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாஸாவும் அவரது பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவும் கூறிவருகின்றனர்.

விடுதலைப்புலிகளுடன் தான் அரசபடைகள் யுத்தம் புரிகின்றனவென்றால் இராணுவ முகாம்களைச் சுற்றி வளைத்து நின்று இப்பொழுது தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கும் விடுதலைப்புலிகளுடன் முகாமிலிருந்து வெளியே வந்து நேரடியாகப் போர் புரியலாமே!

நேற்று முன்தினம் நள்ளிரவு பன்னிரண்டு

# கிளிநொச்சியில் மீண்டும் பதற்றம்மக்கள்வெளியேற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் மீண்டும் பதற்ற நிலை ஏற்பட்டு மக்கள் பீதியினால் மீண்டும் இடம்பெயரத் தொடங்கியுள்ளனர்.

யுத்த நிறுத்தம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் தத்தமது இருப்பிடங்களுக்கு கடந்த ஞாயிறு வந்து குடியேறத் தொடங்கினர்.

குடியேறிய மக்கள் கிளிநொச்சியிலுள்ள இராணுவ முகாம் பலப்படுத்தப்படுவதையடுத்து மீண்டும் வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

கிளிநொச்சி இராணுவ முகாமில் புதிதாக மண்மூடைகள் அடுக்கப்பட்டு, பதுங்கு குழிகள் வெட்டப்படுகின்றன. இது தவிர இராணுவ முகாமுக்கு ஹெலிகொப்டரில் புதிதாக இராணுவத்தினரும், ஆயுதங்களும் கொண்டு வந்து இறக்கப்படுவதாக செய்திகள் அடிபடுகின்றன.

இச் செய்திகள் பரவலாக அடிபடத் தொடங்கியதையடுத்து மக்கள் பீதிகொண்டு தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி வருகின்றனர். (49)

## மூட்டை முடிச்சுகளுடன் நகரைவிட்டு வெளியேறினர்

(விசேட நிருபர்)

நேற்று முன்தினம் வீடுகளுக்குத் திரும்பியவர்கள் நேற்று (18-6-90) மீண்டும் மூட்டை முடிச்சுகளுடன் வெளியேறினர்.

யுத்த மீறல் பற்றிய செய்தி நேற்று வெளியானதை அடுத்து பீதி அடைந்த யாழ்நகரை மையப்படுத்தி வாழும் குருநகர், கொட்டடி, நாவாந்துறை, யாழ்நகர் பகுதிமக்கள் நேற்றுப் பாதுகாப்புத்தேடி வாகனங்களிலும், வள்ளங்களிலும் சென்று கொண்டிருந்தனர்.

கொழும்புத்துறை செபமாலைமாதா கோவில், அரியாலை யூதாததேயு ஆலயம், பாஷையூர் பத்திமாதா கோவில், வசந்தபுரம், அரியாலை, மண்ணித்தலை, பாலாவி, பள்ளிக்குடா போன்ற இடங்களுக்கு இடம் பெயர்ந்தவர்கள் சென்று தங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது.

இதனிடையே கடைக்காரர்கள் கடைகளில் இருக்கும் பொருட்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு எடுத்துச் சென்றமையும் காணமுடிந்தது. (21)

## புனரமைப்பு வேலைகளுக்கு தேசநிர்மாணிகள் நிறுவனம்

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மின்சக்தி நீர்வள அபிவிருத்தி, கட்டிட நிர்மாணம், நெடுஞ்சாலைகள் போன்ற துறைகளில் புனர் நிர்மாண, புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ள தேசநிர்மாணிகள் எனும் நிறுவனத்தை தமிழீழ ஆய்வு நிறுவனம் (ரூட்) முறைப்படி ஆரம்பித்து வைத்துள்ளது

நிர்மாணத்துறையில் உள்ள மந்த நிலையையும், தடங்கல்களையும் நீக்கி மக்களுக்கு சிறப்பான சேவை செய்வதற்கான வழிவகைகள் விரிவாக இங்கு ஆராயப்பட்டன

தேசநிர்மாணிகள் நிறுவனம் பல கட்டிட வேலைகளையும், பாரிய வீடமைப்பு திட்டங்களையும், குடிநீர் விநியோகத் திட்டங்களையும் உடனடியாக ஆரம்பித்துள்ளது தமிழீழத்தின் அபிவிருத்தி நிர்மாணப் பணிகளில் இது குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

## கிளிநொச்சி கச்சேரி ஆவணங்கள் இட மாற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்றுக்காலையும் பதற்றநிலை காணப்பட்டதால் கிளிநொச்சிக்கச்சேரி திறக்கப்பட்ட உடனேயே மூடப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி கச்சேரிக்கு வந்த ஊழியர்கள் அங்கு பதற்றநிலை ஏற்பட்டதால் பீதியுற்று வந்த பஸ்ஸிலேயே திரும்பி யாழ்ப்பாணம் சென்றுள்ளனர்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகரின் பணிப்பைத்தொடர்ந்து கிளிநொச்சி கச்சேரியில் எஞ்சி நின்ற ஊழியர்களின் உதவியுடன் அங்குள்ள முக்கிய ஆவணங்கள், தஸ்தாவேஜுகள், கோவைகள் அனைத்தும் வாகனங்களில் ஏற்றப்பட்டு ஜெயந்திநகர் குருகுலம் சைவச்சிறார் இல்லத்திற்கும், வட்டக்கச்சி அரசினர் விவசாயப்பண்ணைக்கும் எடுத்துச்செல்லப்பட்டன.

கிளிநொச்சி விவசாய உற்பத்தி நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த பசளைகள் அனைத்தும் உடனடியாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. அந்நிலையத்திற்கு சொந்தமான உழவு இயந்திரங்கள் 2 இனம் தெரியாதவர்களினால் எடுத்துச்செல்

## மக்கள் இடம்பெயர்வு

(ஈச்சமோட்டை)

கோட்டையிலிருந்து இராணுவத்தினர் பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி நேற்றுக் காலை ஷெல் தாக்குதல்களை நடத்தியதால் 2000க்கு மேற்பட்ட பொதுமக்கள் இடப்பெயர்ந்துள்ளனர். தற்பொழுது இவர்கள் கொழும்புத்துறை சென். ஜோசப் மகா வித்தியாலயம், கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய அரங்கம் உட்பட தனியார் வீடுகளிலும் தஞ்சம் அடைந்துள்ளனர். (43)

## தமிழ்த்தினப் போட்டி

(முல்லைத்தீவு)

தமிழ்த் தினப்போட்டி, பாண்டியன்குளம்கொத்தணிப் பாடசாலையில் கொத்தணி அதிபர் திரு. சு. திருஞானம் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பாண்டியன்குளம் கொத்தணி அங்கத்துவப் பாடசாலைகள் யாவும் பங்கு கொண்டன. முதன்மை இடங்களைப் பெற்ற மாணவ மாணவியருக்குப் பாராட்டுதல் வழங்கப்பட்டது.

மாணவர்களது கலையாற்றலையும் ஆக்கத்திறனையும் அதிபர்களும் ஆசிரியர்களும் பாராட்டினர். மாணவர்களின் ஆக்கத்திறனை வெளிக்

## அனாதரவான சடலம் அடையாளம் காணப்பட்டது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை வளவில் அனாதரவாகக் காணப்பட்ட சடலம் விடுதலைப்புலிகளால் அடையாளம் காணப்பட்டு பொதுமக்களால் எரிக்கப்பட்டது.

இந்த நபர் தனது வானில் சுன்னாகம் சந்தையிலிருந்து வெண்காயத்தை வாங்கிக் கொண்டு அவரது சொந்த ஊரான பதுளைக்குக் கொண்டு செல்லும் வழியில் கடந்த வியாழக்கிழமை அதிகாலை கிளிநொச்சி இராணுவ முகாம் இராணுவத்தினரால் சுடப்பட்டு குறை உயிருடன் பிடிக்கப்பட்டுஇராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டவராம்.

பின் இவர் கொலை செய்யப்பட்டு, கைகால்கள் வெட்டப்பட்டு வீதியில் வீசப்பட்டாராம்.

இவருடன் அதே வானில் பிரயாணம் செய்த ஒருவரிடம் இத்தகவல்களை விடுதலைப்புலிகள் சேகரித்துள்ளனர். (49)

### இரசாயனக் குண்டு வீச்சு

## சிறீலங்கா குற்றச்சாட்டிற்கு விடுதலைப் புலிகள் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள கிரான் சிங்கள இராணுவ முகாம் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் நச்சுக் கலந்த இரசாயன குண்டுகளை பாவித்து வருவதாக சிறீலங்கா அரசு குற்றம் சாட்டியுள்ளமை அப்பட்டமான பொய்யென தமிழீழ விடுதலைப் புலிகள் மறுப்புத் தெரிவித்துள்ளது.

சிறீலங்கா அரசு கூறுவது போன்று தம்மிடம் நச்சுக் கலந்த இரசாயன குண்டுகள் எதுவும் இல்லையென கூறியுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழர் பிரதேசத்தின் மீதும், அப்பாவி தமிழ் மக்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள தனது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை மூடிமறைப்பதற்கும் உலக நாடுகளின் கவனத்தை தன்பக்கத்தில் ஈர்த்துக் கொள்வதற்குமான பாரியதொரு பொய்யே இதுவென்றும் தெரிவித்துள்ளது.

## நெடுந்தீவு மக்கள் குடிநீரால் பாதிப்படைகின்றனர்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு 3ஆம், 4ஆம் வட்டாரங்களில் வசிக்கும் மக்கள் குடிநீர் பிரச்சினையால் தொடர்ந்து பெரிதும் கஷ்டமடைந்து வருகின்றார்கள். இம் மக்கள் நாளாந்த தமது குடிநீர் தேவையின் நிமித்தம் பல மைல்கள் தூரம் நடந்து அலைந்து திரிய வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நெடுந்தீவு பிரதேச சபையினர் 14ஆம் 15ஆம் வட்டாரப் பகுதிகளில் குடிநீர் பிரச்சினையை தீர்த்து வைத்துள்ளது போன்று இப்பகுதி பிரச்சினையும் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுப்பார்களென்று இப்பகுதி மக்கள் எதிர்பார்த்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. சில பகுதிகளில் செஞ்சிலுவைச் சங்கத்தினரால் பவுசர்கள் மூலம் தண்ணீர் விநியோகம் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## சாவகச்சேரி வைத்தியசாலை நவீனமயப்படுத்தப்படும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிஅரசினர் வைத்திய சாலை நவீன மயமாக அபிவிருத்தி வேலைகள் செய்யப்படவுள்ளன.

இந்த நவீன மயமான கட்டிடங்களை அமைப்பதற்கான வரைபடங்களும் தயாரித்துப் பூர்த்தியாகியுள்ளது, நிதிஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நவீன மயப்படுத்தப்

## சாரணர் சின்னம் சூட்டும் வைபவம்

(சாவகச்சேரி

சாவகச்சேரி சந்திரபுர

ஒப்பரேஷன்'' நடத்தினார்.

தமிழினத்தை முற்றாக அழிக்க முடியாதது மட்டுமல்ல தமிழினத்தின் விடுதலை உணர்வையும் அழிக்க முடியவில்லை. விடுதலைப்புலிகளின் விடுதலை வேட்கையையும் அத்துலத்முதலியினால் தணிக்க முடியவில்லை!

இன்று பிரேமதாசா அரசும் அதே பேடித்தனமான போர் முறையைப் பின்பற்றி பொதுமக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளை நோக்கி ஷெல் அடித்துக் கொண்டிருக்கிறது; ஹெலியிலிருந்து கண்மூடித்தனமாக சுட்டுத்தள்ளுகிறது, குண்டுவீச்சு விமானங்கள் குண்டு வீசித்தாக்குகின்றன!

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்குமிடையில்தான்போர் நடக்கிறது என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாஸாவும் அவரது பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவும் கூறிவருகின்றனர்.

விடுதலைப்புலிகளுடன் தான் அரசபடைகள் யுத்தம் புரிகின்றனவென்றால் இராணுவ முகாம்களைச் சுற்றி வளைத்து நின்று இப்பொழுது தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கும் விடுதலைப்புலிகளுடன் முகாமிலிருந்து வெளியே வந்து நேரடியாகப் போர் புரியலாமே!

நேற்று முன்தினம் நள்ளிரவு பன்னிரண்டரை மணிக்கு யாழ். கோட்டை இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் ஆரம்பித்தனர்.

கடந்த சனிக்கிழமை யாழ். கோட்டை இராணுவம் கண்மூடித்தனமாக ஷெல் அடித்துச் சில உயிர்களையும் பலியெடுத்ததும் பலரைக் காயப்படுத்தியதும் பல சேதங்களை ஏற்படுத்தியதும் விடுதலைப்புலிகளை இத் தாக்குதலை மேற்கொள்ளச் செய்தன.

நள்ளிரவு முதல் விடுதலை புலிகள் கோட்டை வாசலில் நின்று தாக்குதல் நடத்திய போது இராணுவமும் நேரடியாகவே வெளியே வந்து போர் புரிந்திருக்கலாம்.

ஆனால் கோட்டைக்குள்ளிருந்து புலிகளுடன் போர் புரியாமல் மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி ஷெல் அடிக்கப்பட்டது. அதிகாலையில் ஹெலி வந்து கண் மூடித்தனமாகச் சுட்டது. குண்டு வீச்சு விமானங்கள் குண்டு வீசித் தாக்கின. இதே முறைதான் கிழக்கிலும் பின்பற்றப்படுகிறது.

அரசபடைகளின் இத்தாக்குதல் தமிழினத்தை அழிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையே தவிர புலிகளுடன் நடக்கும் யுத்தமல்ல என்பது தெளிவு.

ஜே. வி. பி. க்கு நடந்த கதிதான் புலிகளுக்கும் ஏற்படுமென்று சிறிலங்கா ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

ஜே. வி. பிக்கும் அரசாங்கத்துக்குமிடையேயுள்ள பிரச்சினை சிங்கள சிறிலங்காவின் வர்க்க ஆதிக்கப் போட்டி. ஜே. வி. பி. தலைவர்களை அழித்தவர்கள் அங்கு சிங்களமக்களை ஷெல்அடித்தோ, குண்டுவீசியோ அழிக்கவில்லையே!

தமிழினத்தை அழிப்பதற்கு இப்பொழுது சிறிலங்கா அரசுக்கு எட்டப்பன் கூட்டம்உதவுகிறது. இதே கூட்டம்தான் முன்னர் அந்நிய இந்தியப்படைக்குத்துணையாக நின்றது.

இந்த எட்டப்பர் கூட்டத்தை பிரேமதாசா அரசும் நம்பினால் இந்தியப்படைக்கும் ராஜீவ் அரசுக்கும் நேர்ந்த கதிதான் ஏற்படுமென்பதை இப்போதே சொல்லிவைக்கவிரும்புகிறோம்.

# மன உணர்வுகளை புறக்கணிக்க முடியாது

(புதுடில்லி)

',இலங்கையில் நடக்கும் நடவடிக்கைகளின் நிமித்தம் தமிழக மக்கள் மத்தியில் உருவாகிவரும் மன உணர்வுகளை புறக்கணித்து விடமுடியாது'' என்று தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் திரு. வி. பி. சிங்கை சந்திப்பதற்காக புதுடில்லி சென்றுள்ள கலைஞர் நிருபர்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியப் பிரமுகர்களில் ஒருவரான திரு. கிட்டு தம்முடன் இரண்டு முறை டெலிபோனில் தொடர்புகொண்டதாகவும், அவருடனான இந்த சந்திப்பு நாற்பத்தைந்து நிமிடங்கள் இடம்பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

# கிளிநொச்சி கச்சேரி ஆவணங்கள் இடமாற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்றுக்காலையும் பதற்றநிலை காணப்பட்டதால் கிளிநொச்சிக்கச்சேரி திறக்கப்பட்ட உடனேயே மூடப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி கச்சேரிக்கு வந்த ஊழியர்கள் அங்கு பதற்றநிலை ஏற்பட்டதால் பீதியுற்று வந்த பஸ்ஸிலேயே திரும்பி யாழ்ப்பாணம் சென்றுள்ளனர்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகரின் பணிப்பைத்தொடர்ந்து கிளிநொச்சி கச்சேரியில் எஞ்சி நின்ற ஊழியர்களின் உதவியுடன் அங்குள்ள முக்கிய ஆவணங்கள், தஸ்தாவேஜுகள், கோவைகள் அனைத்தும் வாகனங்களில் ஏற்றப்பட்டு ஜெயந்திநகர் குருகுலம் சைவச்சிறார் இல்லத்திற்கும், வட்டக்கச்சி அரசினர் விவசாயப்பண்ணைக்கும் எடுத்துச்செல்லப்பட்டன.

கிளிநொச்சி விவசாய உற்பத்தி நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த பசளைகள் அனைத்தும் உடனடியாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. அந்நிலையத்திற்கு சொந்தமான உழவு இயந்திரங்கள் 2 இனம் தெரியாதவர்களினால் எடுத்துச்செல்லப்பட்டன.

காணி அலுவலகத்திலுள்ள சுவர்ணபூமி உறுதிகள், பர்மிட்டுகள் மற்றும் கோவைகள் அனைத்தும் வட்டக்கச்சிக்கு கொண்டுசெல்லப்பட்டதால் காணிஅலுவலகம் வட்டக்கச்சியிலும் விவாக, பிறப்பு, இறப்பு சம்பந்தமானவை ஜெயந்திநகருக்கும் எடுத்துச்செல்லப்பட்டதால் பதிவாளர் அலுவலகம் ஜெயந்தி நகரிலும் இயங்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. (49)

# கறுப்புச் சந்தைக்காரர் மீது கடும் நடவடிக்கை

கூ. ச உதவி ஆணையாளர் பஞ்சலிங்கம்

(கிளிநொச்சி)

தனியார் துறை வியாபாரிகளால் தூண்டப்பட்ட நிலையில கறுப்புச் சந்தை நடவடிக்கைகள் காணப்படின் தீவிர நடவடிக்கை எடுக்க சங்கமும் திணைக்களமும் தவறமாட்டாது. முக்கியமாக பல நோக்குக்கூட்டுறவுச் சங்ககிளைக்குழு உறுப்பினர்களும் முகாமையாளர்களும் பண்டகசாலயின் பாதுகாப்பை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும் கிளைகளில் ஏதாவது கொள்ளைச் சம்பவம் ஏற்பட்டால் தற்போது இப்பகுதிக்குப் பொறுப்பாகவுள்ளவர்களிடம் முறைப்பட்டு கடும் நடவடிக்கை எடுக்கப் பின் நிற்கமாட்டோம் - இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் க. பஞ்சலிங்கம் பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ்அறிக்கையில்,பல நோக்குகூட்டுறவுச்சங்கங்கள் தமது விநியோகத்துக்கு அரிசி, மா, சீனி, போன்ற தேவையான உணவுப் பண்டங்கள், எரிபொருள், தேயிலை, சவர்க்காரம், தீப்பெட்டி, போன்ற அத்திய வசியப் பொருட்கள் மக்களுக்குப் பங்கீட்டு அடிப்படையில் விற்பனை செய்யும் ஏற்பாட்டினை நடைமுறைப் படுத்தும்படியும் வேண்டப் படுகிறது.

அவ் வறிக்கையில் தொடர்ந்து கூறப்பட்டிருப்பதாவது:

உணவுத் திணைக்களத்துடனும், பெற்றோலிய கூட்டுத் தாபனத்துடனும் தொடர்பு கொண்டு, கையிருப்பில் உள்ள பண்டங்களை சங்கங்களுச்கு வழங்க ஏற்பாடு உண்டு. எவ்வாறாயினும், சங்கங்கள் தங்கள் முயற்சி மூலம் இரண்டு மாதங்களுக்கு வேண்டிய உணவுப் பண்டங்களை இருப்பில் வைத்து விநியோகிக்கப் படவேண்டிய திட்டம் உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டும்.

# அகதிகள் விபரத்தை உடன் திரட்டுக

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் உள்ள அகதிமுகாம்களளின் விபரத்தை உடனடியாக திரட்டி தருமாறு கிராமசேவையாளர்களை கேட்டுக்கொண்டதிற்கிணங்க சில கிராம சேவையாளர்கள் தங்கள் கிராம சேவையாளர் பகுதியில் உள்ள அகதிமுகாம்களை திரட்டி வருகின்றனர். (43)

# தமிழ்த்தினப் போட்டி

(முல்லைத்தீவு)

தமிழ்த் தினப்போட்டி, பாண்டியன்குளம்கொத்தணிப் பாடசாலையில் கொத்தணி அதிபர் திரு. சு. திருஞானம் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பாண்டியன்குளம் கொத்தணி அங்கத்துவப் பாடசாலைகள் யாவும் பங்கு கொண்டன. முதன்மை இடங்களைப் பெற்ற மாணவ மாணவியருக்குப் பாராட்டுதல் வழங்கப் பட்டது.

மாணவர்களது கலையாற்றலையும் ஆக்கத்திறனையும் அதிபர்களும் ஆசிரியர்களும் பாராட்டினர். மாணவர்களின் ஆக்கத்திறனை வெளிக்கொணர்வதற்கு இத்தகைய போட்டிகள் அவசியமென சொத்தணி அதிபர் வலியுறுத்தினார்.

முதன்மை இடங்களைப் பெற்ற மாணவ மாணவியர்கள் மாவட்டப் போட்டியில் கலந்து கொள்வர். (58)

# நகரப் பகுதி வெறிச்சோடிக் கிடந்தது

(விசேட நிருபர்)

யாழ். நகரப் பகுதி, குருநகர், கொட்டடி, நாவாந்துறை, முஸ்லிம் வட்டாரம் என்பனநேற்று வெறிச்சோடிக் காணப்பட்டன.

பாடசாலைகள்நடைபெறாததுடன், யாழ் வைத்திய சாலையில் தங்கி சிகிச்சை பெற்று வந்தவர்களும் நேற்று விடிந்ததும்தனியார் வைத்திய சாலைகளுக்கும், வீடுகளுக்கும் கொண்டு செல்லப்பட்டனர்.

கடைகள் ஒற்றைக் கதவில் அத்தியாவசிய பொருட்களை மாத்திரம் விற்பனை செய்து வந்ததுடன், மீனுக்குப்பெரும் தட்டுப்பாடு நிலவியதும் குறிப்பிடத்தக்கது. (21)

# புங்குடுதீவு அந்தோனியார் திருநாள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் ஆலய வருடாந்த உயர் திருவிழா அடுத்தமாதம் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

7 ஆம் திகதி சனிக்கிழமை கூட்டு வழிபாடு, பஜனை நற்கருணைப்பவனி என்பனவும் இடம்பெறும்.

8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விசேட தியாகபூசை, திருச்சொரூப தேர்ப்பவனி என்பன இடம்பெறும்.

இம் மக்கள் நாளாந்த தமது குடிநீர் தேவையின் நிமித்தம் பல மைல்கள் தூரம் நடந்து அலைந்து திரிய வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நெடுந்தீவு பிரதேச சபையினர் 14ஆம்

கள் எதிர்பார்த்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. சில பகுதிகளில் செஞ்சிலுவைச் சங்கத்தினரால் பவுசர்கள் மூலம் தண்ணீர் விநியோகம் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரி வைத்தியசாலை நவீனமயப்படுத்தப்படும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிஅரசினர் வைத்திய சாலை நவீன மயமாக அபிவிருத்தி வேலைகள் செய்யப்படவுள்ளன.

இந்த நவீன மயமான கட்டிடங்களை அமைப்பதற்கான வரைபடங்களும் தயாரித்துப் பூர்த்தியாகியுள்ளது,நிதிஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நவீன மயப்படுத்தப் படும நடவடிக்கையால் புதிய அறுவைச் சிகிச்சை நிலையம் எகஸ்ரே கருவி படப்பிடிப்பு நிலையம், நவீன இரத்த வங்கி ஆகியனவற்றிற்கான புதிய கட்டிடங்களும் அமைக்கப்படவுள்ளன. இவற்றிற்கான வரைபடங்களும் வந்து சேர்ந்துள்ளதுடன்; இந்த வேலைகளின் பூர்த்திக்கென சுமார் எட்டு லட்சத்திற்கும் அதிகமான நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சி நோயாளர் நலன்புரி சங்கம். சாவகச்சேரி வைத்தியசாலை அதிகாரிகள், தென்மராட்சிப் பிரதேச தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் சுகாதாரப் பொறுப்பாளர் திரு. கே. செல்வராஜா ஆகியோர் விரைவில் கூடி ஆலோசிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (35)

# சாரணர் சின்னம் சூட்டும் வைபவம்

(சாவகச்சேரி

சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் சாரணர் சின்னம் சூட்டும் வைபவம் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட சாரண ஆணையாளர் திரு. கே.கோபாலகிருஷ்ணன் இப்பாடசாலை சாரண சிறுவர்களுக்கு சின்னங்களைச் சூட்டி வைத்தார்.

பாடசாலை சாரண ஆசிரியர் திரு. எஸ். தர்மலிங்கம் தலைமையில் ஆரம்பமான இந்த விழாவை அதிபர் திரு. கே. பேரம்பலம் சாரணர் கொடியேற்றி வைத்து, ஆசியுரை கூறி ஆரம்பித்து வைத்தார்.

காகம், கிளி, மயில், சேவல் ஆகிய நான்கு பிரிவுகளைச் சேர்ந்த 32 சாரணச் சிறுவர்களும் சின்னங்கள் சூட்டப்பட்டு கௌரவிக்கப் பட்டார்கள்.

# சிறுவர் பூங்கா அமைக்க லயன்ஸ் கழகம் முயற்சி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரில் நவீன சிறுவர் பூங்கா ஒன்றும், நவீன வசதிகளையும் ,உபகரணங்களையும் கொண்ட சிறுவர் விளையாட்டு மைதானம் ஒன்றையும் அமைப்பதற்கான முயற்சிகளை சாவகச்சேரி லயன்ஸ் கழகம் மேற்கொண்டுள்ளது.

இதற்கா[illegible] ஆரம்ப நடவடிக்கைகளை விரைவில் சாவகச்சேரி லயன்ஸ் கழகம்,மேற்கொள்ளவுள்ளது. (35)

# ஊழிய[illegible]கள் வரவு ஸ்தம்பிதம்

(ஈச்சமோட்டை)

யாழ். நகரில் நேற்று இடம் பெற்ற தாக்குதல் சம்பவங்களைத் தொடர்ந்து அரச அலுவலகங்கள், தனியார் ஸ்தாபனங்கள் என்பவற்றின் ஊழியர்களின் வரவு முற்றாக ஸ்தம்பிதமடைந்து காணப்பட்டது. அத்துடன் போககுவரத்து சேவைகளும் முற்றாக இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (43)

# ஆண்டுவிழா

(கொழும்புத்துறை)

இலங்கை மெதடிஸ் தமிஷனரியின் 176 ஆவது ஆண்டு விழா பருத்தித்துறை கட்டைவேலி மெதடிஸ் தசேகரத்தினால் இம்மாதம் 29 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

அன்றைய தினம் பருத்தித்துறைகட்டைவேலிமெதடிஸ்தசேகரத்திற்குட்பட்ட ஆலயங்களில் மாலை நான்கு மணிக்கு விஷேட ஆராதனையும் 30ஆம் திகதி காலை பத்து மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த ஆலயத்தில் வாலிபர்களுக்கான வேதாகமப் பொது அறிவுப் போட்டியும், மாலை மூன்று மணிக்கு மெதடிஸ்த சேகரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் கண்காட்சியும், விற்பனையும் இடம் பெறும்.


Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

## ஒளிமயமான

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

அரசினர் வைத்தியசாலை டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜோசைப் அறவழி போராட்டக்குழு செயலாளர் திரு கே. ஜீவகதாஸ் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.




# இன்றைய போர் சிறு சம்பவத்தால் ஏற்பட்டதல்ல; பின்னணி உள்ளது

10-6-90 அன்று மட்டக்களப்பில் சிங்கள காவல்துறையினருடன் உண்டான சிறிய பிரச்சினை ஒரு போராக மாறியது என்று பலர் கருதலாம்.

11ஆம் திகதியில் இருந்து 16ஆம் திகதி போர் நிறுத்தம் ஏற்படும்வரை 75க்கும் மேற்பட்ட போராளிகள் உயிரழந்தார்கள்.

300க்கும் மேற்பட்ட பொது மக்கள் சிங்கள இராணுவத்தால் கொல்லப்பட்டார்கள் பல கிராமங்கள், கடைகள் எரிக்கப்பட்டன.

16ஆம் திகதி நாம் போர் நிறுத்தத்திற்கு இணங்கிய போதும் அரசு போர்நிறுத்த உடன்பாட்டை மீறியதோடு தமிழ்பேசும் மக்கள்மீது முழுப் போரைப் பிரகடனப்படுத்தியுள்ளது. தொடர்ந்தும் தமிழ், முஸ்லிம் மக்கள் பெருமளவில் கொல்லப்பட்டும் உடமைகள் அழிக்கப்பட்டும் வருகிறார்கள்.

ஒரு சிறு பிணக்கு பெரும் போராக மாறியமைக்கு பல காரணங்கள் இருந்தன.

### முகாங்கள் விஸ்தரிப்பு

ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி எம்முடன் பேசிய பொழுது தான் போரை விரும்பவில்லை என்றும் பிரச்சினையைப் பேசித் தீர்க்க விரும்புவதாகவும் கூறி வந்தார்.

ஆனால் சிங்களப்படை மேலும் மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டு முகாம்கள் பலமாக்கப்பட்டு போருக்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டன.

### குடியேற்றங்கள் தொடர்ந்தன

குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்படும் எனக் கூறப்பட்டது.

ஆனால் குடியேற்றங்கள் தொடர்ந்தன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்று அல்லது இரண்டு முகாம்களைத்தவிர மற்றயவை மூடப்படும் எனக் கூறினார்.

ஒரு சில முகாம்களை எமது திருப்திக்காக மூடியபின் மற்றைய முகாம்களை மூடுவதால் சிங்களவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை, முஸ்லிம்கள் முகாம்கள் மூடப்படுவதை விரும்பவில்லை எனக் கூறிக் கொண்டு அம்முகாம்களைப் பலப்படுத்தினார்கள்.

உதாரணமாக தோப்பூர், மூதூர் முகாம்களை மூட முஸ்லிம் மக்கள் விரும்பியபோதும் அரசு அவர்கள்விரும்பவில்லை என மூட மறுத்தது.

### முஸ்லிங்களை ஏமாற்றுகின்றது

அண்மையில் நடந்த போரில் முஸ்லிம்களைப் பாதுகாப்பதாக ஏமாற்றும் அரசு கல்முனை, வாழைச்சேனை, மூதூர், கிண்ணியா பகுதிகளில் வாழும் முஸ்லிம் மக்கள் மீது குண்டுகளை வீசி அவர்களை அழிக்கத்தயங்கவில்லை.

மாகாணசபை விரைவில் கலைக்கப்படும் என்றும் ஆறாவது சட்டத்திருத்தம் விரைவில் நீக்கப்டடும் என்றும் கூறப்பட்டது.

ஆனால் சாதாரண பிரச்சினைகளை பெரிதுபடுத்தி இதனால் தெற்கிலும் பாராளுமன்றத்திலும் சுமுகமான சூழ்நிலை ஏற்படவில்லை எனக் தமிழீழத்தை புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்க முயன்றது.

சிங்கள இராணுவமும், காவல்துறையும் தாம்தான் தமிழீழத்தின் அரசு என்பது போல் செயல்பட விரும்பின.

70களில் இருந்து 87 வரை சிங்கள இராணுவம் தமிழீழப் பகுதியில் அரசுக்குள் ஓர் அரசாக செயற்பட்டது.

### ஆதிக்கம் செய்ய முடியாது

சிங்கள அரசோ அல்லது இராணுவமோ, காவல்துறையோ தாம் விரும்பிய வண்ணம் தமிழீழ மண்ணில் ஆதிக்கம் செலுத்த முடியாது என்பதை உணர்ந்திருந்த போதிலும் இந்த மாற்றத்தை ஏற்றுக்கொள்ளவும், தாங்கிக் கொள்ளவும் அவர்களால் முடியவில்லை.

இதன் ஒட்டுமொத்தமான விளைவுதான் இப்போராட்டம்.

இப்போராட்டம் பல உண்மைகளை எடுத்துக்காட்டி நிற்கிறது.

1. இடைக்காலத்தீர்வுகள் நிரந்தர அமைதியைத் தரமாட்டா.

2. சிங்கள ஆதிக்கம் தமிழீழத்தில் இனியும் தொடர முடியாது.

3. இன்றைய தமிழீழத்தின் தலைமைகளை விலைகொடுத்து வாங்கவும் முடியாது. அழுத்தம் போட்டு பணிய வைக்கவும் முடியாது.

4. தமிழீழ மக்களை தொடர்ந்து ஏமாற்ற முடியாது.

5. தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் பிரித்து வடக்கையும் கிழக்கையும் பிரித்து ஆளும் சூழ்ச்சி இனிமேல் சரிப்பட்டு வராது.

6. பிரேமதாசாவுக்கும் ஜே ஆருக்கும் முன்னைய ஸ்ரீலங்கா பிரதமர்களுக்கும் தமிழ் பேசும் மக்களை அழிக்கும்-அடக்கியாளும் மனநிலையில் வேறுபாடு கிடையாது.

### முகாங்கள் மீது தாக்குதல்

தமிழீழப் போராட்ட வரலாற்றில் முதன் முதலாக இராணுவ முகாம்களை விட்டு இராணுவம் விரட்டியடிக்கப் பட்டது. புலிகளுக்கு கிழக்கில் பலமில்லை, ஆதரவில்லை என்ற கிழக்குப் பகுதியில் இருந்துதான் இவர்கள் விரட்டப்பட்டார்கள்.

கல்முனை, கல்குடா, திரியாய், தோப்பூர், கின்னியா முகாங்களில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

தமிழீழமே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பின்னால் அணிதிரண்டு நிற்கின்றது. தமிழீழ விடுதலைப்புலிகளை ஜே.வி.பிக்கும், தமிழர் தம் தலைவர் திரு. வே. பிரபாகரனை வரதராஜப் பெருமாளுக்கும் ஒப்பிட்டுப் பேசி இருக்கும் பிரேமதாசாவுக்கும், ரஞ்சன் விஜேயரத்தினாவுக்கும் தமிழீழவிடுதலைப் புலிகள் ஜே. வி. பி. அல்ல என்பதும் திரு.பிரபாகரன் பெருமாள் அல்ல என்பதும் நன்கு தெரியும்.

இத் தீவை ஆக்கிரமித்த உலகின் நாலாவது பெரிய இராணுவத்தை எதிர்த்து சிங்கள அரசோ அல்லது வேறு யாருமோ போரிடவில்லை.

தமிழீழ மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையின் கீழ் அணிதிரண்டு நின்று போராடி அவர்களை வெளியேற்றுவதிலும் வெற்றி பெற்றார்கள் என்பதை திரு. பிரேமதாசாவும், ஸ்ரீலங்கா அர

## எமது வீரம்

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

அஞ்சலி கூட்டத்தில் கைதடியைச் சேர்ந்த வீரவேங்கை பிரேமனின் தாயாரான திருமதி பராசக்தி சோமசுந்தரம் அசீம்அஷாத்தின்நினைவுஸ்தூபியைத் திறந்துவைத்தார்.

சாவகச்சேரி பஸ்நிலையத்தில்வீரவேங்கை அஷாத்திற்கு அழகான பளிங்குக் கற்களாலான நினைவு ஸ்தூபி ஒன்று அமைக்கப்பட்டு, அதில் அவரின் உருவப்படமும் வைக்கப் பட்டிருந்தது. பலர் அதற்கு மலர்மாலை அணிவித்தனர் இளம்பெண்கள் உட்பட பலர் அதற்கு மலர்தூவி மரியாதை செய்தனர்.

## துண்டுப்பிரசுர மிரட்டல்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமாலை யாழ். நகரின் மேலாகப் பறந்த இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான விமானத்தில் இருந்து துண்டுப்பிரசுரங்கள் போடப் பட்டன.

அத்துண்டுப் பிரசுரங்களில் விடுதலைப் புலிகளினால் முற்றுகைக்கு உள்ளாகியுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு உணவு, மருந்து, நீர் விநியோகம் செய்ய விடாமல் புலிகள்

## மரண அறிவித்தல்

(வீரமரணம்

### கந்தையா நந்தபாலன் (சுருளி)

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தை பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா நந்தபாலன் (சுருளி) வீரமரணமடைந்தார். இவர் வ. கந்தையா (வெளிக்கள உத்தியோகத்தர், காணிப்பகுதி, கிளிநொச்சி), முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வரும், க. கேதீஸ்வரன், க. கோகிலா தேவி, க. பரமேஸ்வரன் (மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி), க. புஸ்பலலிதா (மாணவி, கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20. 6. 1990 பிற்பகல் 3-00 மணிக்கு அன்னாரின் பெரியதகப்பனார் ச. தியாகராஜா (நில அளவைப்பகுதி) அவர்களின் இல்லத்தில் இருந்து கோண்டாவில் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

66, பாற்பண்ணையடி, திருநெல்வேலி.

தகவல்; வ. கந்தையா

## ஓராண்டு நினைவஞ்சலி



அழிக்கப்பட்டும் வருகிறார்கள்.

ஒரு சிறு பிணக்கு பெரும் போராக மாறியமைக்கு பல காரணங்கள் இருந்தன.

### முகாங்கள் விஸ்தரிப்பு

ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி எம்முடன் பேசியபொழுது தான் போரை விரும்பவில்லை என்றும் பிரச்சினையைப் பேசித் தீர்க்க விரும்புவதாகவும் கூறி வந்தார்.

ஆனால் சிங்களப்படை மேலும் மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டு முகாம்கள் பலமாக்கப்பட்டு போருக்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டன.


UNIVERSITY OF JAFFNA

**TENDER NOTICE**

SUPPLY OF AIR CONDITIONERS

Sealed Tenders are invited forthe supply of air conditioners at the following locations:

1. Medical Faculty-
   a. Department of Physiology 01 No.
   b. Department of Pathology 01 No.
   c. Department of Bio-Chemistry 01 No.
   d. Department of Anatomy 01 No.
   e. Medical Faculty Library 01 No.
   f. Medical Faculty Board Room 01 No.
2. Library- 02 Nos.
3. Finace Branch 01 No.
4. Department of Maths-Computer Unit 01 No.
5. Computer Unit 03 Nos.

The Tenders should be forwarded to the Registrar, University of Jaffna by registered post or personally with the mark "Tender for the Supply of Air Conditioners" to reach him on or before the 9th July 1990 at 10 a. m. Tenders will be opened on the same day at 10. 30 a. m.

Registrar

(B-1171)


என மூட மறுத்தது.

### முஸ்லிங்களை ஏமாற்றுகின்றது

அண்மையில் நடந்த போரில் முஸ்லிம்களைப் பாதுகாப்பதாக ஏமாற்றும் அரசு கல்முனை, வாழைச்சேனை, மூதூர், கிண்ணியா பகுதிகளில் வாழும் முஸ்லிம் மக்கள் மீது குண்டுகளை வீசி அவர்களை அழிக்கத்தயங்கவில்லை.

மாகாணசபை விரைவில் கலைக்கப்படும் என்றும் ஆறாவது சட்டத்திருத்தம் விரைவில் நீக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

ஆனால் சாதாரண பிரச்சினைகளை பெரிதுபடுத்தி இதனால் தெற்கிலும் பாராளுமன்றத்திலும் சுமுகமான சூழ்நிலை ஏற்படவில்லை எனக் காலம் கடத்தினார்கள்.

தமிழீத்தில் அமைதியும் சமாதானமும் ஏற்பட எனக் கூறிக்கொண்டு தமிழீழத்தின் அழிவுக்கு இந்தியப்படையோடு ஒத்துழைத்த ஈ.பி.ஆர் எல். எப், ரெலோ, புளொட், போன்ற குழுக்களுடனும் தமிழீழத்தில் எவ்வித ஆதரவும் அற்ற தனிமனிதக் கட்சிகளுடனும் கூட்டுறவை ஏற்படுத்தியது.

இந்தியா செய்ததுபோல் அவர்களை எமக்கு எதிராக பயன்படுத்தும் முயற்சியில் மறைமுகமாக இறங்கியது.

வடக்கு, கிழக்கு மாகாண சபை ஆளுனராக தமிழர் அல்லது முஸ்லிம் ஒருவரை நியமிக்கவும், திருகோணமலை அரசாங்க அதிபராக தமிழரையும், அம்பாறையில் மேலதிக அரசாங்க அதிபராக முஸ்லிம்மையும் நியமிக்க இணங்கியது.

### அம்பாறையில் முஸ்லிம்களே பெரும்பான்மை

அம்பாறையில் சிங்கள மக்கள் பெரும்பாண்மையாக வாழ்கிறார்கள் என்றும் அங்கு சிங்களவர் ஒருவரே அரச அதிபராக இருக்க வேண்டும் எனக் கூறிய அரசிடம் அம்பாறையில் முஸ்லிம் மக்களே பெரும்பான்மையினராக வாழ்கிறார்கள் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து மிகுந்த தயக்கத்துடன் மேலதிக அரச அதிபராக ஒரு முஸ்லிம்மை நியமிக்க இணங்கியது.

இதையும் சூழ்நிலை சரியில்லை என செய்யாமல் காலம் கடத்தியது. சிங்கள அரசு சமாதானம் என்ற போர்வையில் தனது இராணுவம், காவல்துறை, அரச நிர்வாகம் மூலம் தமி

டம்.

இப்போராட்டம் பல உண்மைகளை எடுத்துக்காட்டி நிற்கிறது.

1. இடைக்காலத்தீர்வுகள் நிரந்தர அமைதியைத் தரமாட்டா.

2. சிங்கள ஆதிக்கம் தமிழீழத்தில் இனியும் தொடர முடியாது.

3. இன்றைய தமிழீழத்தின் தலைமைகளை விலைகொடுத்து வாங்கவும் முடியாது. அழுத்தம் போட்டு பணிய வைக்கவும் முடியாது.

4. தமிழீழ மக்களை தொடர்ந்து ஏமாற்ற முடியாது.

5. தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் பிரித்து வடக்கையும் கிழக்கையும் பிரித்து ஆளும் சூழ்ச்சி இனிமேல் சரிப்பட்டு வராது,

### யாழ் கோட்டைமீது

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளும் சமுகந்தரவில்லை. போக்குவரத்துச் சேவை ஸ்தம்பிதமடைந்திருந்தது. யாழ் மாநகர சபை எல்லைக்கு அப்பால் சில கடைகளில் வியாபாரம் நடைபெற்றது. ஓரிரு ஓட்டோக்கள் மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருந்தன. பண்டங்கள் யானை விலை விற்றன.

நேற்று மாலை 5.45 மணியளவில் இலங்கை விமானப் படை விமானம் ஒன்று யாழ் நகரில் மேல் சுற்றிப்பறந்து துண்டுப் பிரசுரங்களை வீசியது.

### தமிழ்பேசும்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னோடியாகவுமே இவ் இரசாயன ஆயுதங்கள் பற்றிய பொய்ச் செய்தியை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் வெளியிட்டுள்ளனர்.

16. 06. 1990 அன்று மாலை 6 மணிக்கு அமுலுக்கு வந்த யுத்த நிறுத்தத்தை இன்றுவரை ஸ்ரீலங்காப் படையினர் கடைப்பிடிக்கவில்லை. தொடர்ந்தும் எமது மக்கள் மீதும் எமது இயக்கத்தின்மீதும் வானில் இருந்தும், கடலில் இருந்தும், தரையில் இருந்தும் தாக்குதலை நடாத்திக்கொண்டு இருக்கின்றார்கள்.

குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை, திருக்கோணமலை ஆகிய பகுதிகளில் தமிழ்பேசும் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாகின்றனர். பலஆயிரக்கணக்கானோர் அகதிகளாகஇடம் பெயர்ந்துள்ளனர். தமிழர் கிராமங்கள் சிங்களப் படையால் தீயிட்டுக் கொளுத்தப்படுகின்றன.

இந்த நிலையிலேயே ஸ்ரீலங்கா பாதுகாப்பு இணையமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்தினா எம்மீது யுத்தத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளார். இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச்செயற்குழு நேற்று வெளியிட்ட அறிக்கை கூறுகின்றது.

### யாழ். மாவட்டத்தில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர், உதவி அரசாங்க அதிபர்கள், பெற்றோலியக் கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர், உதவி அரசாங்க அதிபர், அலுவலக நிர்வாக அதிகாரி ஆகியோர்.

சகல கிராம சேவை உத்தியோகத்தர்களும் உடனடியாக இடம் பெயர்ந்தோர் விபரங்களை தயாரித்து உதவி அரசாங்க அதிபர்களிடம் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

இவ்வாறு அரசாங்க அதிபர் விடுத்துள்ள அறிக்கை தெரிவிக்கின்றது.

வர் திரு. வே. பிரபாகரனை வரதராஜப் பெருமாளுக்கும் ஒப்பிட்டுப் பேசி இருக்கும் பிரேமதாசாவுக்கும், ரஞ்சன் விஜேயரத்தினாவுக்கும் தமிழீழவிடுதலைப் புலிகள் ஜே. வி. பி. அல்ல என்பதும் திரு. பிரபாகரன் பெருமாள் அல்ல என்பதும் நன்கு தெரியும்.

இத் தீவை ஆக்கிரமித்த உலகின் நாலாவது பெரிய இராணுவத்தை எதிர்த்து சிங்கள அரசோ அல்லது வேறு யாருமோ போரிடவில்லை.

தமிழீழ மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையின் கீழ் அணிதிரண்டு நின்று போராடி அவர்களை வெளியேற்றுவதிலும் வெற்றி பெற்றார்கள் என்பதை திரு. பிரேமதாசாவும், ஸ்ரீலங்கா அரசும் இராணுவமும் நினைவில் வைத்திருப்பது நல்லதாகும்.

எனவிடுதலைப்புலிகள் ஆனி மாதப் பத்திரிகைத் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலர்மாலை அணிவித்தனர் இளம்பெண்கள் உட்பட பலர் அதற்கு மலர்தூவி மரியாதை செய்தனர்.

## துண்டுப்பிரசுர மிரட்டல்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமாலை யாழ். நகரின் மேலாகப் பறந்த இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான விமானத்தில் இருந்து துண்டுப்பிரசுரங்கள் போடப்பட்டன.

அத்துண்டுப் பிரசுரங்களில் விடுதலைப் புலிகளினால் முற்றுகைக்கு உள்ளாகியுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு உணவு, மருந்து, நீர் விநியோகம் செய்ய விடாமல் புலிகள் தடுத்துள்ளதாகவும், அம்முகாம்களுக்கு விநியோகங்கள் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற ரீதியிலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

## தமிழரின் பாதுகாப்பில் அரசுக்கு அக்கறையாம்!

### லண்டனில் இலங்கைத்தூதுவர்பேட்டி

(லண்டன்)

கொழும்பிலும் மற்றும் இடங்களிலும் வாழும் தமிழ் மக்களுக்கு இன்று மட்டுமல்ல என்றும் பாதுகாப்பளிக்க வேண்டிய கடமை பாதுகாப்புத்துறைக்கும் அரசுக்கும் இருக்கிறது. சில தீயசக்திகள் அரசுக்கு நெருக்கடி ஏற்படுத்துவதற்காகக் குழப்பம் செய்ய முனைவார்கள் என்பதால் தமிழ்மக்களின் பாதுகாப்பில் அரசு கவனமாக இருக்கிறது என்று லண்டனில் இலங்கைத் தூதுவராக இருக்கும் ஜெனரல் சோமபால ஆட்டிக்கல தெரிவித்தார்.

லண்டன் பி. பி. ஸி. தமிழோசை நிகழ்ச்சிக்கு வழங்கிய பேட்டியில் ஜெனரல் சோமபால வடக்கு கிழக்கில் இப்பொழுது நடை பெறும் சம்பவங்கள் துரதிர்ஷ்டமானவையென்றார்.

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் கைப்பற்றிய பகுதிகளை மீண்டும் இலங்கை அரச படைகள் கைப்பற்றி விட்டதாகவும், திருக்கோணமலை நகரம் அரசபடைகளின் கட்டுப்பாட்டிலிருப்பதாகவும், வடக்கில் விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்குமிடையில் கடும் சண்டை நடைபெற்றுவருவதாகவும் பி.பி.ஸி தமிழோசை நேற்றிரவு இலங்கைப் பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டிக் கூறியது.

துக் கல்லூரி), க. புஸ்பலலிதா (மாணவி, கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20. 6. 1990 பிற்பகல் 3-00 மணிக்கு அன்னாரின் பெரிய தகப்பனார் ச. தியாகராஜா (நில அளவைப்பகுதி) அவர்களின் இல்லத்தில் இருந்து கோண்டாவில் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

66, பாற்பண்ணையடி, திருநெல்வேலி.

தகவல்; வ. கந்தையா

## ஓராண்டு நினைவஞ்சலி



## பெனா

### கனகசிங்கம் நல்லநாதன்

தமிழீழ மண்ணில் 02-12-1970

தமிழீழ மண்மீட்பில் 21-06-1989

வன்னி மண்ணில் பிறந்த மறவேங்கை
மண் மீட்புக்காக உயிர் கொடுத்த தியாக வேங்கை
உன் போன்றோர் செய்த தியாகங்கள் வீண்போகாது
விரைவில் காண்போம் தமிழீழம்...

மண்மீட்புக்காக 21-6-1989-ல் இந்திய அமைதிப்படையுடன் மருக்காரம்பளையில் நடந்த நேரடி மோதலில் வீரமரணமடைந்த பெனா அவர்களுக்கு எமது

**வீர அஞ்சலி**

தவசியா குளம், ஈச்சங்குளம், வவுனியா.

பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்கள், தமிழீழ மக்கள்

(B-1187)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 - ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆம் தேதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.